Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 319 பிலவ வருடம், ஆவணி மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(03.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 24, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## வளர்ப்பு நாய்களுக்கு வரி



வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கான வரியை செலுத்தும் யோசனையொன்று தம்புள்ளை மாநகர சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை மாநகர சபைக்குட்பட்ட 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் ஆண்டு... 02»




# நாட்டை திறப்பதா? தொடர்ந்து மூடுவதா?

02»

## இன்று முக்கிய தீர்மானம்

- முடக்கத்தை தொடருங்கள் சுகாதாரத்துறை கோரிக்கை
- பொருளாதாரம் பாதிக்கும் அரசாங்கம் திட்டவட்டம்

## சில துறைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

அத்தியாவசிய பொதுமக்கள் சேவைகள் சட்டத்தின் கீழ் துறைமுகங்கள் அதிகார சபை சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை அத்தியாவசிய சேவைகளாக ஜனாதிபதி பிரகடனம் செய்துள்ளார்.

துறைமுகங்கள் அதிகார சபை நிறைவேற்ற வேண்டிய அனைத்து சேவைகள், பெட்ரோலிய உற்பத்தி, திரவ வாயு உள்ளிட்ட அனைத்து எரிபொருள் விநியோகம், ரயில்வே திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து பொதுப் போக்குவரத்து சேவைகள், பொது சேவைகளை நடத்திச்செல்வதற்கு தேவையான பராமரிப்பு மற்றும் நடவடிக்கை பிரிவுகள் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட களப்பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் சேவைகளும் அத்தியாவசிய சேவைகளுக்குள் அடங்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்து அரச வங்கிகள், காப்புறுதி சேவைகள், சுகாதார சேவையுடன் தொடர்புடைய அனைத்து சேவைகள், சதொச... 02»

## அரசு மீண்டும் ரணிலிடம் சரண்



### எதிர்வுகூறும் ஐ.தே.க பொதுச்செயலர் பாலித

•யோ.தர்மராஜ்

நாட்டை மீண்டும் 2023 ஆம் ஆண்டுக்குள் ரணில் விக்ரமசிங்க விடம் ஒப்படைத்து அரசாங்கம் சரணடைய வேண்டிய நிலைமை வரும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டாளர்கள் குழுவுடன் இணைய வழி ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின்மீது மொட்டிலுள்ளவர்களே அதிக அதிருப்தியடைந்துள்ளனர். 69 இலட்சம் மக்களும் ஐக்கிய தேசியக் கட்சியினரை விட ரணில் விக்ரம சிங்கவின் மீதே அதிக எதிர் பார்ப்பை வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதுடன், கட்சியை விட்டு பிரிந்த எவருக்கும் எதிர்காலம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வாதிகாரத்துக்கான பாதையே அரசின் அவசர நிலை அறிவிப்பு



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் போர்வையில் அவசரகால நிலையை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இது அரசாங்கத்தின் தவறான செயல் மற்றும் திறமையின்மைகளை மூடிமறைக்கும் ஒரு தன்னிச்சையான செயல் மாத்திரமே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் முகமாக நேற்று (02) எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வைத்தே இதனைத் தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரச் சட்டத்தின் மூலம் அதைச் திறம்படச் செய்யமுடியும் என்றாலும், அவசர நிலையை அவசர அவசரமாகக் கொண்டு வருவதன்மூலம் அரசாங்கம் இன்னும் ஆபத்தான நிலையொன்றுக்கே இழுத்துச் செல்கிறது என்றார்.

ஜனநாயக நாட்டை சர்வாதிகாரமிக்க நாடாக மாற்றுவதோடு... 02»

## இலங்கை உள்ளிட்ட 3 நாடுகளில் கொரோனா மரணங்கள் 15 வீதத்தினால் அதிகரிப்பு!

இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஒகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் 15 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய வலயத்தில் கொரோனா மரண வீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வாராந்தம் வெளியிடப்படும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02»

World Health Organization

## ரிஷாட் எம்.பியிடமிருந்து கைத்தொலைபேசி மீட்பு



### சிறைச்சாலை பேச்சாளர் தகவல்

மெகசின் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனிடமிருந்து கையடக்க தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் பேச்சாளரும் சிறைச்சாலை ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட கையடக்க தொலைபேசி தொடர்பில் ஆராய்வதற்காக புலனாய்வு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆணைக்குழுவின் சிபாரிசை முதலில் பூர்த்திசெய்யுங்கள்!

### வெளிவிவகார அமைச்சரை சந்திக்க நிபந்தனைகளை முன்வைத்தார் பேராயர் மெல்கம் ரஞ்சித்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சில நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் தான் ஜி.எல்.பீரிஸை சந்திக்கத் தயார் என கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விடுத்த அழைப்பை ஏற்க வேண்டுமாயின் சில நிபந்தனைகளைப்... 02»

## பொதுமன்னிப்பில் விடுதலையாகும் ரஞ்சன்

### இம்மாத இறுதியில் நடக்கும் வாய்ப்பு



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அரச உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அரச உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் எதிர்க்கட்சி உள்ளிட்ட பல தரப்பினரிடமிருந்து ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு இவ்வாறு ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்வதாக அறியமுடிகிறது. 02»

## நாடாளுமன்ற அமர்வு 2 நாட்களுக்கு மட்டும்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அடுத்தவார நாடாளுமன்ற அமர்வுகளை 2 நாட்களுக்கு மட்டுப்படுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் மாத்திரம் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 02»

## பெரும்போகத்துக்கான பசளையை இறக்குமதிசெய்ய நடவடிக்கை



### ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க

•யோ.தர்மராஜ்

பெரும்போகத்துக்குத் தேவையான பசளைத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, நைதரசன் 10 வீதம் அடங்கும் சீ வீட் பசளை 96 ஆயிரம் மெட்ரிக் தொன்னையும் 15 வீதம் நைதரசன் அடங்கும் புரோட்டீன் பெப்டயிட் 3 ஆயிரம் மெட்ரிக் தொன்னையும் இறக்குமதி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடக மையம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயனப் பசளைப் பயன்பாடு காரணமாக, எமது நாடு மாபெரும் சமூகப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றது. அதன் விளைவாக, மண் வளமற்றுப் போதல்,... 02»

## மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் மின்னல் தாக்கியதில் 3 பிள்ளைகளின் தந்தையான இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி, நாவற்காடு பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் அச்சுவேலி வடக்கை சொந்த இடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட 43 வயதுடைய தியாகராஜா மதனபாதம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வயலில் உழவில் ஈடுபட்டிருந்தவேளை மின்னல் தாக்கியதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது அச்சுவேலி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளதுடன், இறப்பு தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மற்றும் அப்பகுதி சுகாதாரப் பிரிவினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## சுற்றுலா பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பது பெரும் ஆபத்து

### மருத்துவ நிபுணர்கள் சங்க தலைவர் லக்ஷ்மன் எதிரிசிங்க



•யோ.தர்மராஜ்

டெல்ட்டா திரிபுக்கு மத்தியில் உயிர்க்குமிழி அடிப்படையில் சுற்றுலா பயணிகளை அழைத்து வருவது பொருத்தமற்றது. ஆகவே, சுற்றுலா பயணிகளை அழைத்துவந்து சுகாதார திறனை நெருக்கடிக்குள் தள்ள வேண்டாம் என அரச மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும் சுற்றுலா பயணிகளை அழைத்துவருவது குறித்தும் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முழுவதும் டெல்ட்டா திரிபு வேகமாக பரவிவரும் நிலையில், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால் முடிவுகள் எடுக்கும் போது மீண்டும் மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டும். 02»

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 64 பேருக்கும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேரை கைதுசெய்தனர்.

அதேவேளை சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைதுசெய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த வெவ்வேறு இரு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலநறுவை, அநுராதபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக நீதிமன்றிற்கு அழைத்துவர முடியாததையடுத்து அவர்களை காணொளி மூலமாக எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.



முதியவர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கும் வேலைத்திட்டம் நேற்று கொழும்பின் பல பிரதேசங்களில் இடம்பெற்றது.
(படப்பிடிப்பு: லலித் பெரேரா, சமன் அபேசிறிவர்தன)

# திருக்கோவிலில் இரு கைக்குண்டுகள் மீட்பு



(கனகராசா சரவணன்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தங்கவேலாயுதபுரம் விவசாய காணி ஒன்றில் கைவிடப்பட்ட இரண்டு கைக்குண்டுகளை நேற்று முன்தினம் (01) விசேட அதிரடிப்படையினர் மீட்டு அவ்விடத்தில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பை ஒன்றிலிருந்து 2 கைக்குண்டுகளை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கைக்குண்டில் ஒன்று இந்திய தயாரிப்பும் மற்றது இலங்கை தயாரிப்புகள் எனவும் இதனை நீதிமன்ற அனுமதியைப் பெற்று அவ்விடத்திலே வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பகுதி விடுதலை புலிகளின் காலத்தில் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு மேலும் 12 மில்லியன் தடுப்பூசிகள்

இலங்கைக்கு எதிர்வரும் 2 மாதங்களுக்குள் மேலும் 12 மில்லியன் கொவிட் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதாக அரச மருந்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 8 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் மற்றும் 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகளே இவ்வாறு கிடைக்கவுள்ளதாக விஷேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். இதுவரையில் இலங்கைக்கு 22 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை திறப்பதா?...

- நா.தினுஷா -

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்துவதா அல்லது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள 6 ஆம் திகதியுடன் அதனை தளர்த்துவதா என்பது பற்றி இன்று தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

கொவிட் தடுப்பு செயலணியின் விசேட கூட்டமொன்று இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது. அதில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

தற்போதைய நிலைமையில் நாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்காவது முடக்கவேண்டுமென சுகாதாரத்துறை அதிகாரிகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவும் வீதம் குறைந்திருப்பதால் இந்த நிலைமை சில வாரங்களுக்கு இப்படி நீடிப்பது நல்லதென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் இந்த முடக்க நிலைமை தொடருமாயின் நாட்டின் பொருளாதாரம் கடுமையான பின்னடைவை சந்திக்குமென்பதால் கடும் சுகாதார கட்டுப்பாடுகளுடன் நாட்டை திறக்குமாறு அரசின் மூத்த அமைச்சர்களும், பொருளாதார நிபுணர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

# திருமலையில் ஊரடங்கு சட்டத்தை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட 11 பேர் கைது

(திருகோணமலை)

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை - உப்புவெளி பிரதேசத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறி அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் உட்பட 11 பேரை கைதுசெய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

உப்புவெளி பொலிஸாரினால் நேற்று (02) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின் போதே இவ்வாறு 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஊரடங்கு சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் விற்பனை செய்ததாகவும் மற்றும் குறைந்தபட்ச வாடிக்கையாளர்களுக்கும் அதிகமானவர்கள் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊரடங்கு சட்டத்தை மீறியமை, சுகாதார நடைமுறையினை பின்பற்றாமை போன்ற குற்றங்களின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை மதித்து இவ் கொரோனா ஒழிப்பு செயற்பாட்டிற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு திருகோணமலை உப்புவெளி பொலிஸார் வேண்டுகோள் விடுகின்றனர்.

## நாடாளுமன்ற அமர்வு....

இது தொடர்பில் நேற்று மாலை நாடாளுமன்ற சபாநாயகர் அலுவலகம் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த 30ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனத்தை எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை விவாதித்து சபையில் அனுமதிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 02வது பிரிவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்காக இந்த அவசரகால சட்ட ஒழுங்குவிதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன், தற்பொழுது நிலவும் கொவிட் 19 சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு அடுத்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை 06 மற்றும் 07ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக மாத்திரம் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த கேள்விகளைப் பிறிதொரு தினத்தில் எடுத்துக் கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் 11மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை 1979ஆம் ஆண்டு 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசே ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 4.50 மணி முதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

## இலங்கை உள்ளிட்ட...

கொரோனா மரணங்கள் இலங்கையில் 19 வீதத்தினாலும் இந்தியாவில் 17 வீதத்தினாலும் திமோர்-லெசுடேயில் 32 வீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் தெற்காசிய பிராந்தியத்தில் 14 ஆயிரம் கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. ஒப்பீட்டளவில் இது 20 வீத வீழ்ச்சி எனவும் கூறப்பட்டுள்ளது.

## பொதுமன்னிப்பில்...

இதன் காரணமாகவே, எதிர்க்கட்சியிடமிருந்து ஜனாதிபதி எழுத்து மூலமான கோரிக்கை கடிதமொன்றை கோரியுள்ளதாகவும், சஜித் தரப்பிலிருந்து கடிதமொன்று வழங்கப்பட்டதாகவும் அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை, ஆசிரியர்களின் சம்பள விவகாரம், அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம் என அனைத்து வகையிலும் அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில், ரஞ்சனின் விடுதலையின் ஊடாக பொதுமக்களின் கவனத்தை திசைத் திருப்புவதற்கும் அரசாங்கம் இதன் மூலமாக முயற்சிக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

## சுற்றுலா பயணிகளை...

பொருளாதாரத்தை கவனத்தில் கொள்ள வேண்டும், ஆனால் ஒவ்வொரு முடிவும் அறிவியல் அடிப்படையில் எடுக்கப்படவேண்டும். 2020 ஆம் ஆண்டுக்குள் உக்ரேனிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவருவதற்கு தோல்வியுற்ற நிலையில், தற்போது, ஸ்ரேலில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவரும் நடவடிக்கையை அரசு முன்னெடுத்துள்ளது.

ஸ்ரேல் நாடானது மேம்பட்ட சுகாதார அமைப்பை கொண்ட நாடு என்பதோடு, தடுப்பூசிகளின் பாதுகாப்பையும் அதிகம் கொண்டுள்ளது. எனினும், டெல்ட்டா திரிபானது சுகாதார துறைக்கே பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

மேலும், எந்தெந்த தடுப்பூசிகள் திரிபுகளுக்கு எதிர்ப்பை வெளியிடுகின்றது என்பது குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், எந்த தடுப்பூசியும் 100 வீதம் பாதுகாப்பை வழங்குகிறது என யாரும் கூறவில்லை. ஆனால் நாம் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் உச்சபட்ச சுகாதாரத் திறனில் செயற்படுகின்ற நிலையில், இதுபோன்று சுற்றுலாப் பயணிகளை அழைத்துவரும் நாடுகளிலும் சுகாதார திறன் நெருக்கடியில் இருக்கும்போது பயணிகளை அழைத்துவரும் முடிவுகளை அறிவியல் ரீதியில் எடுக்கவேண்டும்.

இவ்வாறான, சூழ்நிலையில், உயிர்க்குமிழி செயன்முறை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகக் கருதப்படலாம். குறிப்பாக, விளையாட்டின் போது வீரர்களை உயிர்க்குமிழியாக முறையில் அழைத்துவரலாம்.

சிறிய ஒரு குழுவினரை அழைத்துவந்து உயர்ந்தபட்ச வைத்திய கண்காணிப்பின் கீழ், அவர்களை வெளியேறாதவாறு அழைத்துச் செல்லமுடியும்.

சுற்றுலா பயணிகளை உயிர்க்குமிழியின் கீழ் அழைத்துவரும்போது, நாட்டின் சுகாதார அமைப்பு அதற்கு ஏற்றவாறு தயார்ப்படுத்த வேண்டும். ஒருதலைப்பட்ச ரீதியில் முடிவுகளை எடுப்பதன் மூலம் நெருக்கடி நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

நாங்கள் தற்போதும் பயணக்கட்டுப்பாடுகளுக்குள்ளேயே இருக்கிறோம். இவ்வாறான தொற்றுநோய் வீழ்ச்சியடையும் காலத்தை நாம் கணக்கிட வேண்டும். இதற்கு அனைத்து அறிவியல் ரீதியான காரணங்களையும் கொண்டு செயற்பட வேண்டும்.

உயிர்க்குமிழியின் கீழ் சுற்றுலாப் பயணிகளை அழைத்துவருவதற்கு முன்னர் தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைக் கொண்டு அதனை தீர்மானிக்க வேண்டும்.

சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர முன் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளை அறிவியல் பூர்வமாகத் தீர்க்கப்பட்டதன் பிறகு, எவ்வளவு காலத்திற்குள் நாடு சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்திருக்க முடியும், அதனை எந்த அடிப்படையில் திறப்பது, எந்தப் பகுதிகள் திறக்கப்படும் என்பதை முடிவுசெய்ய வேண்டும் - என்றார்.

## சில துறைகள் அத்தியாவசிய...

மற்றும் கூட்டுறவு துறைகளுடன் தொடர்புடைய சேவைகளையும் ஜனாதிபதி அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவித்துள்ளார்.

இதனைத் தவிர, மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச அலுவலகங்களால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் மற்றும் தபால் சேவையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் தேவைகளை ஈடுசெய்வதற்கான தேவையான உணவு கையிருப்பு அரசாங்கத்திடம் உள்ளதாகவும் வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சில வர்த்தகர்கள் அதிக விலைக்கு விற்பனைசெய்து இலாபமீட்டும் நோக்கில் நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை மொத்தமாக பதுக்கி வைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு எதிரான இந்த முயற்சியை முறியடிப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் தொடர்பிலான சரத்துக்களை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அமுல்படுத்தியதாகவும் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் கூறியுள்ளார்.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்களை கைப்பற்றி, நியாயமான விலையில் விநியோகிப்பதற்காக சதொச உள்ளிட்ட அரச நிறுவனங்களிடம் கையளித்தன் மூலம் செயற்கையாக உணவுத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் முயற்சியை முறியடிக்க முடிந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வாதிகாரத்துக்கான...

தன்னிச்சையாக மனித உரிமைகளுக்குக் கூட சவால் விடுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்பது தெளிவாகிறது என்று கூறினார்.

அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தினாலும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அது குறைக்காது என்றும், தேவையான எண்ணிக்கையிலான தடுப்பூசிகளை நாடு பெறாது என்றும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர நிலை உதவாது என்றும் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் பொருட்களின் விலையையோ அல்லது வெளிநாட்டு கையிருப்புக்களின் அளவையோ கட்டுப்படுத்த முடியாத அரசாங்கத்திற்கு மக்களை ஒடுக்குவதற்கு மட்டுமே அவசர நிலை தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை தூக்கி எறிந்து சர்வாதிகாரப் பயணத்தை மேற்கொள்ளும் அவசரகால வர்த்தமானியை உடனடியாக திரும்பப்பெறுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை பிரயோக ரீதியாக அமுல்படுத்துமாறும், அதன் ஊடாக நுகர்வோர் பொருட்களை பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்குமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

அவசரகால நிலையை கொண்டுவரும் செயல்முறையை ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி முற்றிலும் எதிர்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வளர்ப்பு நாய்களுக்கு...

முதல் வரித்தொகையை செலுத்துவது கட்டாயமாக்கும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் இதற்கான யோசனையை தான் முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக தம்புள்ளை மாநகர சபையின் தவிசாளர் ஜாலிய ஒபாத்தவினால், மாநகர சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மாநகர எல்லைக்குள் செலுத்தப்படும் வரித்தொகையை அதிகரிக்கவும் மாநகர சபைத் தவிசாளர் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது 50 வீதமாக காணப்படுகின்ற வரித்தொகையை, 100 வீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

## பெரும்போகத்துக்கான...

நிலத்தடி நீருடன் நச்சு இரசாயனங்கள் கலத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக, புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன என்று, உலக சுகாதார ஸ்தாபனமும் அறிவித்துள்ளது. இலங்கையில், புற்றுநோய்க்கு இலக்காகும் நபர்களின் எண்ணிக்கையும், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. 2019 ஆம் ஆண்டில் மாத்திரம், 31 ஆயிரத்து 834 புதிய புற்றுநோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால், நாட்டுக்குள் பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரச்சினைகள் உருவாகின்றன. இரசாயனப் பசளைப் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்காக ஜனாதிபதி எடுத்த தீர்மானம், எவ்வகையிலும் அவசரப்பட்டு எடுத்தத் தீர்மானமல்ல.

இதனையடுத்து, தேசிய உரச் செயலகம் ஊடாகச் சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் பதிவுசெய்யப்பட்டனர். அதன் பின்னர், சேதனப் பசளையை உற்பத்திசெய்யும் முதற்தர தேசிய நிறுவனங்கள் 6 தெரிவுசெய்யப்பட்டன. அதன்பின்னர், இரசாயனப் பசளை மற்றும் சேதனப் பசளை ஆகியவற்றை வெவ்வேறு விகிதாசாரங்களில் பயன்படுத்தி, கடந்த ஆண்டு சிறுபோகத்தின் போது, 20 ஆயிரத்து 275 ஹெக்டேயர் நிலப்பரப்பில், சேதனப் பசளையைப் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்தி நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சேதனப் பசளையைப் பயன்படுத்தும் பரீட்சார்த்தத் திட்டத்தின் வெற்றி உறுதிசெய்யப்பட்ட பின்னர், பெரும்போகத்தின்போது, அதாவது இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் முதல் முன்னெடுக்கப்படும் விவசாய நடவடிக்கைகளுக்காக, இரசாயனப் பசளையை இறக்குமதி செய்ய வேண்டாமென்று, ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பெரும்போகத்துக்குத் தேவையான பசளைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, நைதரசன் 10 வீதம் அடங்கும் சீ வீட் பசளை 96 ஆயிரம் மெட்ரிக் தொன்னை கொள்வனவு செய்யவும் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 15 வீதம் நைதரசன் அடங்கும் புரோட்டீன் பெப்டயிட் 3 ஆயிரம் மெட்ரிக் தொன்னையும் இறக்குமதி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி, 6 இலட்சத்து 20 ஆயிரம் முதல் 7 இலட்சம் வரையான ஹெக்டெயார் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் ஏனைய பசளைத் தேவையை, தேசிய உற்பத்தி யாளர்கள் ஊடாகப் பூர்த்திசெய்யவும் எதிர்பார்க் கப்படுகிறது. இதற்காக, தேசிய உரச் செயலகத்தினூடாக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் 39 பேரிடம் இருந்து பசளையைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனுக்களும் கோரப்பட்டுள்ளன.

சேதனப்பசளைப் பயன்பாட்டின்போது, விளைச்சல் குறைவடைந்து, வருமானத்தில் மாற்றம் ஏற்படுமாயின், கட்டுப்பாட்டு விலைக்கும் அதிக விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கின்றமையால், விவசாயிகள் இது விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று, ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இரசாயன விவசாயத்திலிருந்து சேதன விவசாயத்துக்கு மாறுவதானது, விவசாயப் போரின் வெற்றி என்பதோடு, இயற்கையின் இருப்புக்கும் மிக முக்கியமான அடித்தளமாக இருக்குமென்பதே, நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது – என்றார்.

## ஆணைக்குழுவின் சிபாரிசை...

பூர்த்திசெய்ய வேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் வெளிப்படையான முறையில் இடம்பெறுகின்றன என நம்புவதாக ஜி.எல்.பீரிஸுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்வைத்துள்ள இறுதி அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள அந்த கடிதத்தில் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 03.09.2021 வெள்ளிக்கிழமை - ஆவணி 18**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| காலை 6.08 - 7.36 | **ராகு காலம்** | **எமகண்ட காலம்** |
| மாலை 4.47 - 6.11 | காலை10.40-பி.ப12.12 | மாலை 3.14 - 4.46 |
| | **குளிகை காலம்** | **துர் முகூர்த்தம்** |
| | காலை 7.37 - 9.09 | காலை 8.30 - 9.19 |
| | | பிற்பகல் 12.34 - 1.23 |

| | |
|---|---|
| **நட்சத்திரம்: புனர்பூசம்** | **திதி: அமர பட்ச துவாதசி** |
| மாலை 4.42 வரை | காலை 7.44 - 04.09.2021 |
| பூசம் | காலை 8.24 வரை |
| மாலை 4.42 - 04.02.2021 | **கரணம்: பாலவம்** |
| மாலை 5.45 வரை | காலை 7.44 வரை |
| **யோகம்: வியதீபாதம்** | **கௌலவம்** |
| காலை 10.10 வரை | காலை 7.44 - இரவு 8.09 |
| வரீயான் | **தைதுலம்** |
| காலை10.10 -04.09.2021 | இரவு 8.09 - 04.09.2021 |
| காலை 9.38 வரை | காலை 8.24 வரை |

**மேடம்**
வணிகத்தில் சில பிரச்சினைகளும் இலாபங்களும் உருவாகலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவதானம் தேவை. பெற்றோரின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம்.

**ரிஷபம்**
வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். பணிகளில் உயர்பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்**
தம்பதியர் தங்களுக்குள் பெறும் ஆலோசனை நன்மை தரும். வணிகத்தில் புதிய பங்குதாரர் உருவாகலாம்.

**கடகம்**
வேலைகளில் சரியான முறையில் ஆய்வு செய்து நிறைவேற்றுவது நன்மை. அவசரமற்ற கடன்கள் இன்று வாங்காமல் இருப்பதும் நன்மை.

**சிம்மம்**
வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். நிதி நிலை கவலை தரலாம். இன்று இயலுமான வரை கடன் கொடுக்காமல் இருப்பதும் நன்மை.

**கன்னி**
பணியிடங்களில் மதிப்பு கிடைக்கலாம். வேலைக்கான நேர்முக தேர்வுகள் பயனளிக்கும். கலைத்துறையில் மேன்மை உண்டாகும்.

**துலாம்**
முயற்சி திறனும், நேர்மறை சிந்தனைகளும் உண்டாகலாம். உங்கள் சொற்களில் கவனம் தேவைப்படலாம். கல்வியில் மாணவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம்.

**விருச்சிகம்**
வழக்கு பிரச்சினைகள் தீர்வு பெறும் நிலை உண்டாகலாம். பணிச்சுமை உண்டாகலாம். உடல் நலத்திலும் சிறிய கவனம் தேவைப்படலாம்
**சந்திராஷ்டமம்:**
**கேட்டை நட்சத்திரத்திற்கு**
**காலை 10.20 வரை**

**தனுசு**
சில வலி சம்பந்தப்பட்ட உடல்நல பிரச்சினைகள் ஏற்படலாம். வியாபார மாற்றம் உண்டாகலாம். சொந்த விடயங்களை அனைவரிடமும் பகிராமல் இருப்பது நன்மை.
**சந்திராஷ்டமம்:**
**மூலம் நட்சத்திரத்திற்கு**
**காலை10.20- 04.09.2021**
**காலை 11.34 வரை**

**மகரம்**
தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும். யோகா மற்றும் ஆன்மீக வழிபாடு நன்மை தரும். வேலைகள் நடைபெற துவங்கும்.

**கும்பம்**
பரம்பரை சொத்துகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். பணியில் மேன்மை உண்டாகும். உடல்நலத்தில் இறையருளால் நன்மை கிடைக்கலாம்.

**மீனம்**
தொழில் எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு இறையருள் நன்மை தரும். குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு சுப மங்கள அறிகுறி தோன்றலாம்

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,44,130 | 56,562 | 3,78,168 | 3,828 | 9,400 |




*லங்கா சதொசவில் 130 ரூபாவுக்கு சீனி கொள்வனவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டதையடுத்து, சீனி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மடவளை, வத்துகாமம் வீதியில் அமைந்துள்ள லங்கா சதொச நிறுவனத்திற்கு முன்னால் பொதுமக்கள் வரிசையில் காத்திருப்பதைக் காணலாம்.*

*(படங்கள்: கண்டி நிருபர்)*

# ஐக்கிய மக்கள் சக்தி ஒரு பாரம்பரிய எதிர்க்கட்சி அல்ல

## ஒவ்வொரு நொடியும் மக்களை வாழ வைப்பதே எமது நோக்கமென சஜித் பிரேமதாச தெரிவிப்பு




ஐக்கிய மக்கள் சக்தி ஒரு பாரம்பரிய எதிர்க்கட்சி அல்ல என்றும், மாறாக ஒவ்வொரு நொடியும் மக்களை வாழ வைக்க உதவும் ஒரு எதிர்க்கட்சியாகும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொரோனாவால் போராடும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு மற்ற அனைத்து நடவடிக்கைகளை விடவும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அதற்காக சாத்தியமான சகல வசதிகளையும் தனது கட்சி மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கும் "எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுவதாகவும் அவர் கூறினார்.

கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருத்துவமனை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (02) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் "எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு" நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தும் "ஜன சுவய" கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூக நலத்திட்டத்தின் 25 ஆவது கட்டமாக ரூபா முப்பது இலட்சத்து முப்பது ஆயிரம்(3,030,000) பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் திருகோணமலை கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு வழங்கிவைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் ரூபா இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் (275,000) பெறுமதி வாய்ந்த Multiple Monitors உபகரணங்கள் 2, ரூபா பன்னிரெண்டு இலட்சத்து நாற்பது ஆயிரம் (1,240,000) பெறுமதியான Optiflow Nasal Therapy உபகரணங்கள் இரண்டும் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டதோடு இதனை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவின் கரங்களால் கிண்ணியா ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் ஐ.எம்.ஜவாஹிரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் ஜன சுவய கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றனர். இதற்கு முன்னர் 23 கட்டங்களில் 680 இலட்சம் (68,874,000) ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்க ஐக்கிய மக்கள் சக்தியால் முடிந்தது என்று குறிப்பிட்டார்.

# ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் ஓட்டமாவடியில் 1,187 கொரோனா சடலங்கள் நல்லடக்கம்

(மீராவோடை நிருபர்)

கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் கடந்த முதலாம் திகதி வரை 2 ஆயிரத்து 453 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஒகஸ்ட் மாதத்தில் ஆயிரத்து 187 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடிக்கு தற்போது நாளொன்றுக்கு 40 இற்கும் மேற்பட்ட சடலங்கள் நல்லடக்கத்துக்கு வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் மரண வீதம் அதிகரித்து காணப்படுவதால் ஒகஸ்ட் மாதம் ஆயிரத்து 187 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வாரம் மாத்திரம் 306 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கடந்த 23 ஆம் திகதி மாத்திரம் 57 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவே நாளொன்றில் அதிகூடிய சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, செப்டெம்பர் 03ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பாதிக்கப்படும் முல்லை மீனவர்கள்!

கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் அதிகரித்து நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு – நாயாற்றுப் பகுதிக்கு வெளிமாவட்ட மீனவர்கள் வருகைதருவதாக நாயாற்றுப் பகுதி மீனவர்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

கொவிட் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு வெளிமாவட்ட மீனவர்கள் முடக்க நிலையையும் மீறி நுழைவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அழிவைத் தோற்றுவிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இதனால் முடக்க காலத்தில் நாயாற்றுப்பகுதிக்கு வருகைதரும் வெளிமாவட்ட மீனவர்களைத் தடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பும், உரிய அரச திணைக்களங்களும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடக்க காலத்திலும் நாயாற்றுப் பகுதிக்கு வெளிமாவட்ட மீனவர்கள் வருகைதருவதால் அங்குள்ள தமிழ் மீனவர்கள் மிகவும் அச்சமடைந்த சூழலில் வாழ்கின்றனர். குறிப்பாக கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி முதல்தடவையாக செம்மலை கிழக்கு நாயாற்றுப் பகுதியில் உள்ள வெளிமாவட்ட மீனவர்கள் 25பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவிலே ஐவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி முடக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, குறித்த செம்மலை கிழக்கு நாயாற்றுப் பகுதியில் ஆயிரக்கணக்கில் குடும்பங்களுடன் தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் பெரும்பாலும் பதிவுகள் இன்றி இருந்ததாகவும், இதனால் அங்கு எத்தனைபேர் இருக்கின்றார்கள் என்பதிலும், பரிசோதனைகளை மேற்கொள்வதிலும் பலத்த இடர்பாடுகள் நிலவுவதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அங்கிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் பரிசோதனை செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுப்பதாகவும், தனிமைப்படுத்தலை மீறி வெளியிடங்களுக்குச் சென்றுவருவதாகவும் அதனால் தொற்று மேலும் அதிகரிக்கலாம் எனவும் அப்போது பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அப்பகுதியில் தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் வெளியில் செல்ல முடியாதவாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் ஓகஸ்ட் மாதத்தின் ஆரம்பப் பகுதியில் நாயாற்றிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு சென்றிருந்தனர்.


இவ்வாறு தமது சொந்த இடங்களுக்குச் சென்ற வெளிமாவட்ட மீனவர்கள் மீளவும் தற்போது நாயாற்றுப் பகுதிக்கு வருகைதருவதாக நாயாற்றுப் பகுதிக்குரிய தமிழ் மீனவர்கள் இப்போது தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த 30.08.2021அன்று 10படகுகளில் சிலாபம், கருக்குப்பனைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நாயாற்றுப் பகுதிக்கு வருகைதந்திருப்பதாகவும் தொடர்ச்சியாக வெளிமாவட்டங்களிலிருந்து படகுகளில் மீனவர்கள் நாயாற்றுப் பகுதிக்கு வருகைதருவதாகவும் நாயாற்றுப் பகுதி தமிழ் மீனவர்கள் முறையிட்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான நடவடிக்கையாகும்.

ஏனெனில், முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் வேகமாக அதிகரித்துவருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 29.08.2021 அன்று வெளியான பரிசோதனை முடிவுகளின்படி 50கொவிட் நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அதேபோல் 30.08.2021அன்று 60 கொவிட் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை 31.08.2021அன்று மாத்திரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு கொரோனா நோயாளர்கள் மரணமடைந்துள்ளதுடன், இதுவரையில் 21 கொவிட் மரணங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ள நிலையினையும் அவதானிக்க முடிகின்றது.

இந் நிலையில் இவ்வாறு வெளிமாவட்டங்களிலிருந்து நாயாற்றுக்கு மீனவர்கள் வருகைதருவது முல்லைத்தீவு மாவட்டத்திற்கே பாரிய ஆபத்தினைத் தோற்றுவிக்கும். இவ்வாறு கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள சூழலில், நாடு முடக்கப்பட்டுள்ளது. இப்படியாக நாடு முடக்கப்பட்டுள்ளபோது வெளிமாவட்டங்களிலிருந்து மீனவர்கள் நாயாற்றுப் பகுதிக்கு வருகைதருகின்றனர். இவர்களுக்குரிய அனுமதியை வழங்கியது யார்? இவர்களைக் கட்டுப்படுத்தவேண்டிய பாதுகாப்புத் தரப்பினரும் உரிய அரச திணைக்களங்களும் எங்கே பார்த்துக்கொண்டிருக்கின்றனர்? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்த கொவிட்தொற்று பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பாதுகாப்புத் தரப்பினரும், வெளிமாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்தவேண்டிய கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களும் கரிசனையுடன் செயற்படவேண்டும். நாட்டினுடைய முடக்கத்தை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும். கொரோனா சூழ்நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் மேலும் தாக்கத்தையே உண்டுபண்ணும். உரிய தரப்பினர் இவற்றை அனுமதிக்க கூடாது. மீன்பிடித்துறை அமைச்சர் இதனை கருத்திற்கொள்ள வேண்டும்.



# ஆப்கானின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது?



அமெரிக்காவும் நேச நாடுகளும் ஆப்கானை விட்டு வெளியேறிய மகிழ்ச்சியில் தலிபான்கள் துள்ளிக் குதிக்கிறார்கள். எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது எனத் தெரியாது ஆப்கான் மக்கள் குழம்பிப் போயுள்ளனர். ஆப்கான் சுதந்திரமடைந்து விட்டதெனத் தலிபானின் தலைவர்கள் ஊடகங்களுக்குப் பேட்டியளிக்கின்றனர். ஆப்கானில் உள்ள மக்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக எல்லைப் புறங்களை நோக்கிச் செல்கிறார்கள்.

உலக நாடுகளுடன் நட்புறவுடன் செயற்படுவோம், பயங்கரவாத தாக்குதல்களை நடத்த மாட்டோம், பயங்கரவாதக் குழுக்கள் ஆப்கானில் செயற்பட அனுமதிக்க மாட்டோம், யாரையும் பழிவாங்க மாட்டோம் போன்ற பல உறுதிமொழிகளை தலிபான்கள் வெளியிட்டார்கள். ஆனால், அங்கிருந்து வரும் செய்திகள் தலிபான்களின் உறுதி மொழிகளுக்கு நேர்மாறாக உள்ளன.

ஆப்கானின் நிர்வாகம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதெனத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறிவிட்டது. சில பொருட்கள் கையிருப்பில் இல்லை. வங்கிகள் மூடப்பட்டிருப்பதால் கையில் பணமில்லாமல் பலர் அவதிப்படுகின்றனர். 10-15% மக்களுக்குத்தான் வங்கிக் கணக்குகள் உள்ளன. ஆப்கானின் பொருளாதாரம் பணத்தில் தான் தங்கியுள்ளது.



முந்தைய ஆப்கான் அரசின் சொத்துகள் வெளிநாட்டில்தான் வைக்கப்பட்டிருந்தன. ஆட்சியைப் பிடித்த தலிபான்களால் அப்பணத்தைக் கையாள முடியாத நிலை உள்ளது. ஆப்கான் மத்திய வங்கியின் ஆளுநர் அஜ்மல் அகமதி நாட்டை விட்டு வெளியேறி விட்டார். அமெரிக்க பெடரல் ரிசர்வில் உள்ள 7 பில்லியன் டொலர் மதிப்புள்ள தங்கத்தையும் பணத்தையும் எடுக்க முடியாமல் அமெரிக்கா தடை செய்துள்ளது. அதேபோல் உலக வங்கியும் தாங்கள் ஒதுக்கிய 460 மில்லியன் டொலர் தொகையையும் பிடித்து வைத்துள்ளது.

வருமானத்துக்கு வழியின்றி வங்கிகளில் சேமித்து வைத்துள்ள பணத்தின் எதிர்காலமும் தெரியாமல் ஆப்கான் மக்கள் பெரிய வாழ்வாதார நெருக்கடியையும் பீதியையும் சந்தித்து வருகின்றனர். உலக நாடுகளின் நம்பிக்கையை தலிபான்கள் பெற்றால்தான் அவர்களால் ஆப்கானிஸ்தானை நிதி நெருக்கடி இல்லாமல் நடத்த முடியும்.

இந்நிலையில் ஆப்கான் மக்கள் அன்றாட வாழ்வாதார நெருக்கடியில் தத்தளித்து வருகின்றனர். ஆப்கான் வங்கிகள் வீழ்ந்து விட்டன. மானுட பேரழிவை ஆப்கான் சந்திப்பதாக ஐ.நா. ஏற்கெனவே எச்சரித்துள்ளது.

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஆப்கானுக்கு உதவி புரிவது இனி கடினமே. தலிபான்களை எந்தவொரு நாடும் இதுவரை அங்கீகரிக்கவில்லை. வெளிநாட்டு உதவி கிடைக்கும் அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. உலக நாடுகளின் நம்பிக்கையை தலிபான்கள் பெற்றால்தான் அவர்களால் ஆப்கானிஸ்தானை நிதி நெருக்கடி இல்லாமல் நடத்த முடியும்.

தலிபான்களும் தங்களது புதிய அவதாரமாக கருதிக் கொண்டு அத்தனை நாடுகளிடமும் நட்புக்கரம் நீட்டிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்தான் தலிபான்களுக்கு அல்கொய்தா இயக்கம் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பான அறிக்கையில், பாலஸ்தீனம், காஷ்மீர், சோமாலியா, ஏமென் என முஸ்லிம் நிலங்கள் அனைத்தும் இஸ்லாமிய எதிரிகளிடம் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருப்பது சர்ச்சையாகியுள்ளது.



பயங்கரவாத செயற்பாடுகளுக்கு தளமாக ஆப்கானிஸ்தானை யாரும் பயன்படுத்த முடியாது என்கிற தொனியில் அதன் வெளியுறவு அமைச்சராகப் போகும் ஸ்டானிக்சாய் தெரிவித்த கருத்து இப்போது கேள்விக்குறியாகி உள்ளது. அல் கொய்தா அமைப்பின் முக்கியத் தலைவரும் ஒசாமா பின் லேடனின் முன்னாள் கூட்டாளியுமான டாக்டர் அமின் உல் ஹக் ஆப்கானில் உள்ள தன் சொந்த ஊரான நங்கர்ஹர் மாகாணத்துக்குத் திரும்பி வந்து விட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 1980ஆம் ஆண்டுகளில் பின் லேடனுக்கு நெருக்கமான இவர் கடைசி வரை நெருக்கமாக இருந்தவர். தோராபோராவில் ஒசாமா பின்லேடனின் பாதுகாப்பு தலைவராக இருந்தார். அவருக்கு அங்கு கோலாகல வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஐ.எஸ், லஷ்கர், இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதிகள் உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத அமைப்புகள் முகாமிட தொடங்கி உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. ஆப்கானில் அமைதி ஏற்பட வேண்டும் என விரும்பிய அமெரிக்காவும் நேச நாடுகளும் அங்கிருந்து அமைதியாக வெளியேறிய கடைசிக் கட்டத்தில் தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றது.

காபூலில் தாக்குதலை நடத்தியதற்கு ஒரு இயக்கம் பொறுப்பேற்றது. தாக்குதலுக்குப் பொறுப்பானவரை அழித்ததாக பதில் தாக்குதல் நடத்திய அமெரிக்கா தெரிவித்தது. தாக்குதலுக்கும் எமக்கும் தொடர்பு இல்லை எனத் தெரிவித்த தலிபான்கள் அதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை. இது போன்ற தாக்குதலுக்கு இடமளிக்கப்போவதில்லை என அறிவிக்கவில்லை.

தீவிரவாத அமைப்புகள் என உலக நாடுகளால் அடையாளப்படுத்தப்பட்ட இயக்கங்கள் ஆப்கானில் கால் பதித்துள்ளன. அவற்றின் செயற்பாடுகள் உலக நாடுகளுக்கு சிக்கலையும் தலிபான்களுக்கு தலைவலியையும் ஏற்படுத்தப் போகின்றன.

அமெரிக்காவின் நட்பு நாடுகளுடன் எந்த விதமான மோதலிலும் ஈடுபடக் கூடாது. நட்பு நாடுகளை தாக்கக் கூடாது. அதேபோல் தீவிரவாத இயக்கங்கள் எதற்கும் தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இடம் கொடுக்க கூடாது என்பதே அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தின் சாராம்சம்.

அமெரிக்க ஒப்பந்தத்தை மீறும் வகையில் இந்த தீவிரவாத அமைப்புகள் ஆப்கானிஸ்தானில் முகாமைத்துள்ளன. தீவிரவாத அமைப்புகளின் வருகை தங்களுக்கு எதிராக திரும்பி விடுமோ எனும் அச்சம் தலிபான்களுக்கு ஏற்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்பு என்ற முத்திரையில் இருந்து வெளியேறி அரசியல் இயக்கமாக மாறி முயற்சிக்கும் தலிபான்களுக்கு தீவிரவாத இயக்கங்களின் வருகை முட்டுக் கட்டையாக இருக்கப்போகிறது.

தீவிரவாத அமைப்புகளுடன் தலிபான்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். தீவிரவாத அமைப்புகளை ஆப்கானில் இருந்து வெளியேற்ற தலிபான்கள் முயன்றால் அவை ஒன்றாக இணைந்து தலிபான்களுக்கு எதிராக இயங்கும் நிலை ஏற்படலாம். தீவிரவாத இயக்கங்களை ஆப்கானுக்குள் அனுமதித்தால் உலக நாடுகளின் எதிர்ப்பு உருவாகும். ஆப்கானில் உள்ள ஐ.எஸ். போன்ற தீவிரவாத அமைப்புகளை தலிபான் "தற்காலிகமாக" வெளியேற்ற வாய்ப்புள்ளதாக தெரிகிறது.



தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக தலிபான்கள் எப்படி காய் நகர்த்தும் என்ற கடும் எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது. தீவிரவாத அமைப்புகளை ஆப்கான் அரசு என்ற முறையில் தலிபான் ஒடுக்குமா அல்லது நண்பர்கள் என்ற முறையில் வளர விடுமா என்பது வரும் வாரங்களில் தெரிந்துவிடும்.

உணவுத்தட்டுப்பாடு, ஆப்கான் மக்களின் வெளியேற்றம், தீவிரவாத இயக்கங்களின் வருகை என்பன ஆப்கானை ஆடிப்படைக்கும் முக்கிய பிரச்சினைகளாகும்.

-ரமணி-

# கிளிநொச்சி மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு

## வைத்தியர் நிமால் அருமைநாதன் அறிவிப்பு



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி திகதி கடந்த மாதம் இறுதி பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தடுப்பூசி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இம்மாதம் நான்காம் திகதிக்கு பின்னர் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் நான்காம் திகதிக்கு பின்னரும் இரண்டாவது தடுப்பூசி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி இன்னும் கிடைக்கவில்லை. அது விரைவில் கிடைக்கப்பெறும். அப்போது நாம் பொது மக்களுக்கு அறிவித்தல் வழங்குவோம்.

இம்முறை இரண்டாவது தடுப்பூசி முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்ட குறிப்பிட்ட நிலையங்களில் மாத்திரம் செலுத்தப்படாது. பொது மக்கள் அதிகமாக ஒன்று கூடுவதனை தவிர்க்கும் வகையில் பிரதேசங்கள் ரீதியாக தடுப்பூசி செலுத்தப்படும் நிலையங்கள் உருவாக்கப்பட்டு இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தடுப்பூசி கிடைத்ததும் மேற்படி விபரங்கள் அனைத்தும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தாய்லாந்தினால் மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு



ரோயல் தாய்லாந்து தூதரகத்தினால் இலங்கைக்கு மருத்து உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள ரோயல் தாய்லாந்து தூதரகத்தின் பொறுப்பாளரான தயாடத் கஞ்சனாபிபட்குல்லிடமிருந்து வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே மருத்துவ உபகரணங்களை நன்கொடையாகப் பெற்றுக் கொண்டார்.

நாடு முழுவதும் உள்ள கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படும் பொருட்டு, குறித்த நன்கொடை உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி. ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

30 ஒட்சிசன் செறிவூட்டிகள், 02 வென்டிலேட்டர்கள், 108 ஒட்சிசன் தாங்கிகள், 62 ரெகுலேட்டர்கள் / கேனுலே செட்டுகள், 160 பல்ஸ் ஒக்சிமீட்டர்கள் மற்றும் 150 தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை இந்த நன்கொடையில் உள்ளடங்கும். இந்த நன்கொடையானது, தாய்லாந்தின் வெளிநாட்டு உறவுகள் அமைச்சு, சொம்டெட் ஃப்ரா நயனசம்வர இந்த நன்கொடையில் ஃப்ரா சங்கராஜ் வட், போவோரனிவ்ஸ் விகாரை அறக்கட்டளை, தாய்லாந்தின் இலங்கை சங்கம், தாய். - இலங்கை வர்த்தக சபை மற்றும் கொழும்பிலுள்ள ரோயல் தாய். தூதரகம் ஆகியவற்றின் பங்களிப்புகளை உள்ளடக்கியுள்ளது.நன்கொடைகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை பேங்கொக்கிலுள்ள இலங்கைத் தூதரகம் ஒருங்கிணைந்து மேற்கொண்டதுடன், குறித்த நன்கொடை கட்டார் எயார்வேஸின் உதவியுடன் விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மருதனார்மடம் பழக்கடை வியாபாரி மீது வாள்வெட்டு தாக்குதல்

மருதனார்மடம் சந்தியில் வன்முறைக் கும்பல் ஒன்றினால் பழக்கடை வியாபாரி ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அந்த பகுதியில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து மருதனார்மடம் பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக பழக்கடை நடத்துபவர் மீதே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கழுத்து மற்றும் கால் பகுதியில் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட கும்பலே இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

# குழந்தையை பிரசவித்த தாய் 10 நாட்களில் கொரோனாவுக்கு பலி

## சிசுவுக்கும் தொற்றுறுதி

கொவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாயொருவர் குழந்தையை பிரசவித்து 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பிறந்த குழந்தைக்கும் கோவிட்-19 தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதுடன் குழந்தைக்கு கிளிநொச்சி வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியை சேர்ந்த சண்முகராசா பிரியதர்ஷினி (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண் திடீர் சுகயீனமுற்ற நிலையில் சிகிச்சைக்காக கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் வைத்தியசாலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து அவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் குழந்தை பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குழந்தைக்கு மேற்கொண்ட மருத்துவ பரிசோதனையில் குழந்தைக்கும் தொற்றுறுதியாகியுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அதனையடுத்து தாய் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கடந்த 26ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த பெண் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டதுடன் பெண்ணின் சடலத்தை சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கு காலப்பகுதியிலும் மன்னாரில் அதிகரிக்கும் மக்கள் நடமாட்டம்





(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில் மன்னார் மாவட்ட நகர் பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. குறிப்பாக நேற்று காலையிலிருந்து பலர் அத்தியாவசிய காரணங்களின்றி நகரில் நடமாடியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதேவேளை, சிலர் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் வருகை தந்திருந்தனர். அதேநேரம் நேற்று வங்கி நடவடிக்கைகளும் இடம்பெற்றதுடன் மக்களின் நடமாட்டம் தொடர்சியாக அதிகரித்து செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றபோது மக்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்து ஊரடங்கு நிலையை மதிக்காது செயற்படுவதுடன் அனுமதி பெறாத பல வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி வியாபார நிலையங்கள் மக்களை அதிகளவில் ஒன்று கூட்டி விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதேநேரம் மன்னாரில் பல இடங்களின் உரிய அனுமதியின்றி திருமண நிகழ்வுகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் இடம் பெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.





யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய கஜவல்லிமஹாவல்லி உற்சவம் நேற்று மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

# தொற்றுநோய் தடுப்புப் பிரிவுக்குரிய பொறுப்புகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை

## வைத்தியர் வாசன் ரத்னசிங்கம் குற்றச்சாட்டு

(ரிப்தி அலி)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆலோசனைகள் எதனையும் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு நடைமுறைப்படுத்த முன்வருவதாக இல்லை. அவர்களிடம் தடுப்பூசி வழங்குவது பற்றிய முறையான திட்டமிடல்களும் இருக்கவில்லை. கொரோனா வைரஸின் திரிபுகள் மற்றும் அதன் மாற்றங்கள் தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு விளக்கமளிக்க வேண்டிய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு இன்று மௌனமாக இருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகக் குழுவின் உறுப்பினரான வைத்தியர் வாசன் ரத்னசிங்கம் குற்றஞ்சாட்டினார்.

சுகாதார அறிக்கையிடல் தொடர்பில் விடியல் இணையத்தளம் ஊடகவியலாளர்களுக்கு நடத்திய இணையவழி செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் வளவாளராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 தொற்று நோய்க்கு எதிராக இலங்கையில் ஏற்றப்படும் அனைத்து தடுப்பூசிகளும் தரம்மிக்கவையாகும். இவை அனைத்திற்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த தடுப்பூசிகள் அனைத்தும் மிகச்சிறந்த பெறுபேறுகளை வழங்கியுள்ளன. அதனால் இந்த தடுப்பூசிகளின் தரம் தொடர்பில் நாம் எவரும் அச்சப்பட வேண்டிய தேவையில்லை.

உங்களுக்கு முதலில் கிடைக்கின்ற தடுப்பூசியே மிகச்சிறந்த தடுப்பூசி எனக் கருதுங்கள். எனினும், இந்த தடுப்பூசிகள் தொடர்பில் பொதுமக்கள் உட்பட சமூகத் தலைவர்கள் சிலர் மத்தியிலும் பல முரண்பாடான கருத்துக்களை அவதானிக்க முடிகிறது. அத்துடன் சமூக வலைதளங்கள் ஊடாகவும் கொவிட் தடுப்பூசிகள் தொடர்பில் பல வதந்திகள் பரப்பப்பட்டு வருவதையும் நாம் அறிகிறோம். எமது நாட்டின் ஊடகங்களும், பொறுப்புமிக்க ஊடகவியலாளர்கள் அனைவரும் இந்த விடயம் தொடர்பில் மிக நேர்மையுடன் பணியாற்றுகின்றனர்.

கொவிட்-19 வைரஸின் தாக்கம் காணப்படும் மிக ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டமைக்கு சுகாதார அமைச்சின் கீழுள்ள தொற்று நோய் தடுப்புப் பிரிவின் தவறான செயற்பாடுகளே காரணமாகும். எனினும், உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஓரளவு திருப்திகரமாகவுள்ளது.



மொத்த சனத்தொகையில் 70 சதவீதத்தினர் முதலாவது தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர். அத்துடன் 25 சதவீதத்தினர் இரண்டாம் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

உலகில் 58 நாடுகளில் கொவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசி வேலைத்திட்டங்கள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படாத நிலையில், எமது நாட்டின் முன்னேற்றம் தொடர்பில் நாம் திருப்தியடைய வேண்டியுள்ளது. எனினும், அன்றாடம் நிகழும் கொவிட்-19 மரணங்கள் தொடர்பில் நாம் மிகக்கூடுதலாக சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். தினமும் நிகழும் மேற்படி மரணங்களில் 75 சதவீதத்தினர் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள். ஆனால், அவ்வாறு மரணிப்பவர்களில் 90 சதவீதத்தினர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் எமது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், இது தொடர்பில் எமது முன்மொழிவுத் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சமர்ப்பித்தோம். எமது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார். இதற்கிணங்க நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.7 மில்லியனாக காணப்படும் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தால் இன்று பல மரணங்கள் நிகழாதிருந்திருக்கும்.

எவ்வாறாயினும், எமது ஆலோசனைகள் எதனையும் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. அவர்களிடம் தடுப்பூசி வழங்குவது பற்றிய முறையான திட்டமிடல்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்களின் பொறுப்பிலுள்ள எந்தவொரு நடவடிக்கையும் இப்போது இடம்பெறுவதில்லை. கொரோனா வைரஸின் திரிபுகள் மற்றும் அதன் மாற்றங்கள் தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு விளக்கமளிக்கமளிக்க வேண்டிய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு இன்று மௌனமாக இருக்கின்றது. இவையனைத்தும் இந்தப் பிரிவின் வினைத்திறனற்ற செயற்பாடுகளையே பிரதிபலிக்கின்றன.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அரசாங்கம் மற்றும் சுகாதாரப் பிரிவினர் உட்பட பொதுமக்களாகிய மூன்று தரப்பினரதும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பும் கூட்டிணைப்பும் மிகவும் அவசியமாகும்.எமது நாட்டில் இந்த வேலைத் திட்டம் வெற்றி பெறாமைக்கு பல முக்கிய காரணிகள் உள்ளன. சுகாதார துறையின் பிரதானி மக்கள் முன்னிலையில் பேசமறுக்கின்றார். அரச தரப்பினரின் தலையீடுகளும் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றத் தவறுகின்றனர். இவ்வாறான தவறுகளை எதிர்காலத்தில் திருத்திக் கொண்டு பயணிப்போமானால் ஆரோக்கியமான இலங்கையை விரைவில் கண்டுகொள்ளலாம்.

# கல்முனை பிராந்தியத்திற்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகள் மூன்றாம் நாளுடன் முடிந்தன

## செலுத்தாதோருக்கு விரைவில் என்கின்றனர் அதிகாரிகள்




(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை கடந்த மூன்று தினங்களாக 4 நிலையங்களில் கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் மேற்கொண்டு வந்திருந்த நிலையில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் முடிவுற்ற நிலையில், சாய்ந்தமருதில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிஷாட் அறிவித்துள்ளார்.

அவரது அறிவித்தலில் சாய்ந்தமருது 6ஆம், 13ஆம், 17ஆம் பிரிவுகளுக்கான மற்றும் தடுப்பூசிகள் பெறத் தவறியவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மிக விரைவில் வழங்கப்படும் என்பதுடன், அதற்கான கால அட்டவணைகளும் எமது அலுவலகத்தினால் வெளியிடப்பட்டு அறிவிக்கப்படும். ஆகவே தடுப்பூசி பெறத் தவறியவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மிகவிரைவில் எதிர்வரும் தினங்களில் அறிவிக்கப்படும் என்பதுடன், தடுப்பூசிகளை பெறாதவர்கள் திகதி அறிவிக்கப்பட்டதுடன், பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வியாழன் வரை 04 நாட்களுக்கு கிராம அலுவலர் ரீதியாக பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட தடுப்பூசி செலுத்தும் நிலையங்களில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டு, ஏற்பாடாகி தடுப்பூசி செலுத்தும் பணி புதன்கிழமை வரை இடம்பெற்று வந்த நிலையில், கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் முடிவடைந்தன. இந்நிலையில், கல்முனை தெற்கு பிரிவில் மறு அறிவித்தல் வரை தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறாது என சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார். இதே போன்ற நிலையே கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவிலுள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் நிலவி வருகிறது.

# புதிய அரசியலமைப்பு சிங்கள பௌத்த ஆதிக்கத்தை மேம்படுத்தும் சாசனமாகவே அமையும்

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன்



(வீரமுனை நிருபர்)

புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை. அவ்வாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேம்படுத்துகின்ற சாசனமாகவே அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பின் உருவாக்கத்தேவை தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனங்கள் தமிழ் மக்களின் ஒப்புதல் இன்றியே கொண்டுவரப்பட்டது. குறிப்பாகக் கூறுவதாக இருந்தால் தமிழ்ப் பிரதிநிதிகள் அரசியல் சாசன வரைபுகளில் பங்குதாரர்களாக இருந்ததில்லை.

கோட்டாபய அரசாங்கம் தன்னை ஒரு சிங்கள பௌத்த அரசாங்கமாக காட்டிக்கொள்வதிலேயே பெருமையடைகிறது. இவ்வாறானவர்கள் உருவாக்கும் அரசியல் சாசனம் எவ்வாறு அமையும் என்பதை யாரும் கூறி நாம் அறிய வேண்டியதில்லை. ஜனாதிபதியினுடைய ஒவ்வொரு செயற்பாடும் இந்த நாடு எதனை நோக்கி செல்கிறது என்பதனை வெட்ட வெளிச்சமாக காட்டி நிற்கிறது.

சிவில் நடவடிக்கைகளில் இராணுவ தளபதிகளின் நியமனங்கள், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள பௌத்த பிக்குகளையும் பேரினவாதிகளையும் உள்ளடக்கிய தொல்லியல் செயலணி போன்ற நடவடிக்கைகளைப் பார்க்கின்றபொழுது புதிய அரசியல் சாசனம் என்பது இலங்கை, பல்லின மத, மொழி கொண்ட நாடு என்று ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் உருவாக்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

ஏனைய தேசிய இனங்களுக்கான இறையாண்மையை ஏற்றுக்கொண்டு இந்த நாட்டினுடைய சகல பிரஜைகளையும் சமத்துவமாக மதித்து ஓர் அரசியல் சாசனத்தைக் கொண்டுவந்தால் அது ஓர் அர்த்தமுள்ள செயற்பாடாக அமையும். ஆனால், இந்த அரசாங்கம் அவ்வாறு செய்யாது என்பதே வெளிப்படை.

இவ்வாறான சூழ்நிலையில் ஒரு புதிய அரசியல் சாசன செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சரியான நிலைப்பாடுகளுடன் செயற்படுவதானது விரும்பத்தக்கதும் அறிவுபூர்வமானதாகவும் இருக்கும் என்றார்.

# கொரோனாவை ஒழிக்க சகல ஒத்துழைப்பையும் எந்நேரமும் வழங்கத் தயாராக உள்ளோம்

## சாய்ந்தமருது தலைமை ஜும்மாப் பள்ளிவாசல் தலைவர் ஹிபதுல் கரீம்





(நூருள் ஹுதா உமர்)

நாட்டை கடுமையாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா பெருந்தொற்றை இல்லாதொழித்து இலங்கை மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப பிரார்த்திப்பதுடன், பாதுகாப்பு படையினருக்கும், சுகாதாரத் துறையினருக்கும் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா கட்டுப்பாட்டுக்கு எமது ஊர் சார்பில் எவ்வகையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமோ அவற்றையெல்லாம் முழுமனதுடன் வழங்க எப்போதும் தயாராக உள்ளோம் என சாய்ந்தமருது மாளிகைக்காடு தலைமை ஜும் ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும் ஆப் பள்ளிவாசலினால் முன்னெடுக்கப்படும் கொரோனா தொற்று தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாகைகள் காட்சிப்படுத்தும் செயற்திட்டம் நேற்று முன்தினம் மாலை பள்ளிவாசல் தலைவர் தலைமையில் ஜும்ஆப் பள்ளிவாசல் முன்பாக முதல் பதாகை நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அமீன் றிசாத், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், அம்பாறை மாவட்ட உலமா சபை பிரதித் தலைவர் சட்டத்தரணி முஜீப், கல்முனை இராணுவப்படையணி பதில் பொறுப்பதிகாரி ரஞ்சன தேசப்பிரிய, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும் ஆப் பள்ளிவாசல் செயலாளர் அப்துல் மஜீத் ரோஷன், பள்ளிவாசல் நிர்வாகிகள், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய அதிகாரி ஆர்.பி.அபயகோன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

நாட்டில் தற்போது பரவலாக அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும்கொரோனா தொற்று குறித்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் குறித்த பதாகைகள் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலையில் மஞ்சள் கன்றுகள் வழங்கிவைப்பு



(திருகோணமலை)


திருகோணமலை - மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மஞ்சள் கன்றுகள் வழங்கும் நிகழ்வு பிரதேச சபை தவிசாளர் ஜகத் குமார் வேரகொடவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மொரவெவ பிரதேசத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் மஞ்சள் கன்றுகள் இருக்கவேண்டும் என்ற நோக்குடன் நேற்று முன்தினம் முதல் கட்டமாக நொச்சிக்குளம் மற்றும் கம்பகொட்ட கிராம மக்களுக்கு மஞ்சள் கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன.

இதன்போது மொரவெவ பிரதேச சபையின் சிரேஷ்ட உறுப்பினர் சித்ரவேல் சசிகுமார் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. வெல்லாவெளி பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

## விவசாயப் பயிர்கள் அழிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தின் எல்லைப்புறக் கிராமமான கண்ணபுரம் கிழக்கு கிராமத்தில் நேற்று முன்தினம் அதிகாலை புகுந்த 2 காட்டு யானைகள் கிராம மக்களால் செய்கை பண்ணப்பட்டிருந்த மரவள்ளி, தென்னை, மா போன்ற பயிர்களையும் அழித்துத் துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளதாக அக்கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கிராமத்திற்குள் புகுந்த 2 காட்டுயானைகள் அங்கிருந்து பயிர்களை துவம்சம் செய்த வேளை மக்கள் ஒன்றுகூடி தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு கொளுத்தியும், உரத்த குரலில் சத்தமிட்டும், விரட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் மிக நீண்டகாலமாகவிருந்து காட்டுயானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வாகரை பழங்குடியின மக்களுக்கு மட்டு. இளைஞர்களால் உலருணவுப் பொதிகள்



(மண்முனை நிருபர்)

வாகரைப் பகுதியில் பின் தங்கிய கிராமத்தில் உள்ள பழங்குடியின மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வாகரை குஞ்சங்கல் குளத்தில் நடைபெற்றது.

வாகரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 80 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் தொற்று பரவல் காரணமாக வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளான நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நட்பு மட்டக்களப்பு இளைஞர்களின் நிதியுதவியின் கீழ் இந்த அத்தியாவசிய உலருணவுப் பொதிகளை மட்டக்களப்பு மாவட்ட ஆதிவாசிகளின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் மற்றும் குஞ்சங்கல்குளம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் இணைந்து மட்டக்களப்பு இளைஞர்கள் வழங்கி வைத்தனர்.

# களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு

## கொரோனா நோயாளிகளுக்காக திறந்துவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபா செலவில் கொவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவானது களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் புவனேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது பொது வைத்திய நிபுணர்கள், மயக்க மருந்து வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி தீவிர சிகிச்சைப் பிரிவானது கொரோனா நோயினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகளை வைத்து அதி தீவிர சிகிச்சையளிக்கும் பிரிவாக இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அனர்த்த சூழ்நிலையில் எமது பிரதேச மக்கள் மேற்கொண்ட பற்றுதல் காரணமாக வைத்தியசாலை அத்தியட்சகரின் அயராத முயற்சியினால் இச் சிகிச்சைப் பிரிவு அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர், பெண்களுக்கெதிரான துஷ்பிரயோக தடுப்பு தொடர்பில் மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சிறுவர், பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக தடுப்பு தொடர்பில் விசேட கவனம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது உதவி மாவட்ட செயலாளர் அ.நவேஸ்வரன், சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.எம்.எச்.நயிமுடீன், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ.குகதாசன் மற்றும் நன்னடத்தை அலகுக்கான பொறுப்பதிகாரிகள், மாவட்ட சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, நன்னடத்தை உத்தியோகத்தர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், உள சமூக உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலின் போது தற்போதைய அவசர சூழ்நிலையின் நிமித்தம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக ஏற்படக் கூடிய சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குமான



தடுப்பு பொறிமுறை ஒன்றினை உருவாக்கும் வகையில் பல்துறைசார் அணியினரின் கருத்துகள் பகிரப்பட்டன.

எதிர்காலத்தில் உரிய பல்துறைசார் அணியினர் அனைவரும் ஒன்றிணைந்து கிராம மட்டத்தில் இருந்து மாவட்ட மட்டம்வரை உள்ள தற்போதைய பொறிமுறையினையும் அதேநேரம் பயனாளிகள் இலகுவாக அரச பொறிமுறையினை அணுகி தமது பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக்கொள்ளும் வகையிலான குறுங்கால திட்டம் ஒன்றை உருவாக்கி செயற்படும் பொருட்டும் மாதம் ஒரு முறை இவ்வாறான கலந்துரையாடல்களை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக பிரதேச செயலகங்களின் சிறுவர் பெண்கள் அபிவிருத்திப் பிரிவு மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் நன்னடத்தை அலகுகளின் செயற்பாடுகள் தொடர்ந்து அரச சுற்று நிருபங்கள், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இடம்பெறுவதுடன், சிறுவர் பெண்களின் நலன் கருதி இப்பணிக் குழாமினரை மக்கள் அணுகி தங்களின் பிரச்சினைகள் அல்லது பராமரிப்பு, பாதுகாப்பு சார் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளை 1929 அவரச தொலைபேசி மூலமாகவும் அல்லது காரியாலய நாட்களில் நேரடியாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என்ற தீர்மானங்களுடன் கூட்டம் நிறைவுபெற்றுள்ளது.

## பஞ்ச்ஷீரில் மசூத் படை - தலிபான்களுக்கிடையே கடும் மோதல்







# ஆப்கானில் வெடித்தது உள்நாட்டு போர்: 350 தலிபான்கள் பலி; 40 பேர் சிறைபிடிப்பு

ஆப்கானிஸ்தானில் பஞ்ச்ஷீர் பள்ளத்தாக்கில் தலிபான்களுக்கும், முன்னாள் துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சலேஹ், மசூத் சாலே தலைமையிலான தேசிய கிளர்ச்சி படைக்கும் மோதல் வெடித்துள்ளது.

இருதரப்புக்குமிடையே நேற்றுமுன்தினம் வெடித்த மோதலில் 350 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 40இற்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ‘‘புதிய அரசு அமைப்பது குறித்து இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும்’’ என தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

**‘‘இன்னும் சில தினங்களில் புதிய அரசு அமைப்பது குறித்து அறிவிக்கப்படும்’’ – தலிபான்கள்**

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்க - நேட்டோ படைகள் 31ஆம் திகதி முழுமையாக வெளியேறின. ஏற்கனவே, இங்கு ஆட்சியை கைப்பற்றி விட்ட தலிபான் அமைப்பு, அமெரிக்க படை வெளியேறியதை தொடர்ந்து ஆட்சி அமைப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன் தனித்து ஆட்சி அமைத்தது போல் இல்லாமல், இம்முறை ஆப்கானை இதற்கு முன் ஆட்சி செய்தவர்கள், முக்கிய தலைவர்களும் உள்ளடக்கிய புதிய அரசை அமைக்க தலிபான்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக, இதற்கு முன் ஆட்சி செய்த தலைவர்களுடனும் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இதில், ஒருமித்த கருத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. தலிபான்களின் தலைமை தளபதி ஹைபதுல்லாஹ் அகுந்த்சடா அரசை நிர்வகிக்கும் முக்கிய தலைவர் பொறுப்பிலும், ஹைபதுல்லாஹ்வின் 3 துணைத் தலைவர்களில் ஒருவராக தலிபான் தலைவர் முல்லா அப்துல் கனி பராதர், அரசின் அன்றாட நிர்வாக அலுவல்களை கவனிக்கும் பொறுப்பிலும் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானில் தற்போது பஞ்ச்ஷீர் மாகாணத்தை தவிர, நாட்டின் இதர பகுதிகள் அனைத்தும் தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ளன. ஆப்கானை விட்டு வெளியேறிய ஜனாதிபதி அஷ்ரப் கனியின் அரசில் துணை ஜனாதிபதியாக இருந்த அம்ருல்லாஹ் சலேஹ் மற்றும் மசூத் சாலே தலைமையிலான, ‘தேசிய கிளர்ச்சி படை’யின் கட்டுப்பாட்டில் பஞ்ச்ஷீரிலுள்ளது. இந்த படையில் ஆப்கான் இராணுவத்தின் முன்னாள் வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் பெரும் போராட்ட தலைவரான அகமது ஷா மசூத்தின் மகன்தான் அகமது மசூத் சாலே. ஆயுதங்களை ஒப்படைத்து தங்களிடம் சரணடையும்படி, இந்த படையினரை தலிபான்கள் எச்சரித்து வந்த நிலையில், இருதரப்புக்கும் இடையே நேற்றுமுன்தினம் பயங்கர மோதல் இடம்பெற்றது.

குல்பகார் பள்ளத்தாக்கு வழியாக ஊடுருவ முயன்ற தலிபான்கள் மீது மசூத் படை தாக்குதல் நடத்தியது. பர்வான் மாகாணத்தின் ஜபல் சராஜ் மாவட்டம். பக்லான் மாகாணத்திலுள்ள காவாக் பஞ்ச்ஷீர், அந்த்ராப் மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் தொடர்ந்து நடந்த இந்த உள்நாட்டு போரில் 350 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 40இற்கும் மேற்பட்ட தலிபான்கள் சிறைபிடிக்கப்பட்டதாகவும் மசூத் படை தெரிவித்துள்ளது.

இந்த மோதலில், அமெரிக்க படை விட்டுச் சென்ற அதிநவீன ஆயுதங்கள், டேங்கர்கள் போன்றவற்றை மசூத் படை பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, ‘பஞ்ச்ஷீர் முழுவதும் முற்றுகையிடப்பட்டிருக்கிறது’ என தலிபான்கள் அறிவித்துள்ளனர். இந்த உள்நாட்டு போரால், ஆப்கானில் பதற்றம் நிலவுகிறது.









### பஞ்ச்ஷீரில் இணைய சேவை துண்டிப்பு

தலிபான்களுக்கு கடும் சவாலாக இருக்கும் பஞ்ச்ஷீர் மாகாணத்தைப் பழிதீர்க்க அப்பகுதியில் இணைச் சேவைகளை தலிபான்கள் துண்டித்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக இணையத் தொடர்பு இழந்த அப்பகுதி இளைஞர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். உறவினர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பஞ்ச்ஷீர் பள்ளத்தாக்கு நோக்கி செல்லும் வீதிகளையும் தலிபான்கள் அடைத்து விட்டதால் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதிலும் உள்ளூர் மக்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

பஞ்ச்ஷீர் பகுதிகளை நோக்கி தலிபான்கள் தாக்குதல் தொடுத்துள்ள நிலையில் இணைய வசதி துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்க இராணுவ வாகனங்கள், சீருடையுடன் தலிபான்கள் பேரணி

ஆப்கானை விட்டு வெளியேறிய அமெரிக்க - நேட்டோ படைகள், 70இற்கும் மேற்பட்ட இராணுவ ஹெலிகொப்டர்கள், இராணுவ வாகனங்கள், நவீன ஆயுதங்களை விட்டு சென்றுள்ளது. இவற்றை தலிபான்கள் பயன்படுத்த முடியாத வகையில் தொழில்நுட்ப ரீதியாக செயலழிக்கச் செய்து விட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

ஆனால், அமெரிக்காவின் இந்த இராணுவ வாகனங்கள், ஆயுதங்களை மட்டுமின்றி, அமெரிக்க வீரர்கள் விட்டு சென்ற இராணுவ சீருடைகளை கூட அணிந்து கொண்டு கந்தஹார், அய்னோ மையினா உள்ளிட்ட பகுதிகளில் தலிபான்கள் வெற்றி ஊர்வலம் நடத்திய வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

இதனிடையே காபூல் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள விமான போக்குவரத்தை சீரமைக்க தலிபான்கள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதற்காக கட்டார் அரசின் உதவியை அவர்கள் நாடியுள்ளனர். தலிபான்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கட்டார் அரசு, விமான போக்குவரத்து தொடர்பான தொழில்நுட்ப குழுவொன்றை தனி விமானம் மூலம் காபூலுக்கு அனுப்பி வைத்துள்ளது.

### காபூல் விமான நிலையம் அமெரிக்கர்களால் சேதம்

அமெரிக்க இராணுவம் காபூலை விட்டுச் செல்லும்போது விமான நிலையத்தை பயன்படுத்த முடியாதபடி சேதமாக்கி விட்டதாகவும் 73 விமானங்கள் மற்றும் ஆயுதங்களை அழித்துவிட்டதாகவும் தலிபான்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விரைவில் விமான நிலையத்தை திறக்கவும் சிவில் விமானப் போக்குவரத்தை தொடங்கவும் திட்டமிட்டுள்ள தலிபான்கள் விமான நிலைய புனரமைப்புப் பணிகளுக்காக கட்டாரிலிருந்து நிபுணர்களை வரவழைத்துள்ளனர்.

ஆப்கான் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்காகவும் மனிதாபிமான உதவிகளுக்காகவும் விரைவில் விமான நிலையம் திறக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

### புத்திசாலித்தனமான முடிவு

படை வாபஸ் பெறப்பட்டது குறித்து நாட்டு மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி பைடன் ஆற்றிய உரையில், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் திரும்பப் பெறப்பட்டது சிறந்த, சரியான, புத்திசாலித்தனமான முடிவாகும். இப்போது, ஆப்கானிஸ்தானில் நடந்து வந்த போர் முடிந்து விட்டது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வருவதாக தேர்தலில் வாக்குறுதியளித்தேன். தற்போது அதை நிறைவேற்றி விட்டேன்’’ - என்றார்.

# பலஸ்தீன், காஷ்மீர், யேமன் விடுதலைக்கு தயாராகும்படி தீவிரவாத அமைப்புகளுக்கு அல்-கொய்தா அழைப்பு

தலிபானுக்கு நெருக்கமான அல்-கொய்தா, பலஸ்தீன், காஷ்மீர், யேமன் விடுதலைக்காக சர்வதேச ஜிகாத் நடத்தும்படி தீவிரவாத அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

பின்லேடனின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த அல்-கொய்தாவின் அமைப்பின் அமின் உல் ஹக் 20 ஆண்டுகள் கழித்து காபூலுக்கு திரும்பி வந்தார்.

இதனைத் தொடர்ந்து அல் - கொய்தா வெளியிட்ட அறிக்கையில், பலஸ்தீன், காஷ்மீர், யேமன் விடுதலைக்காக அடுத்த கட்ட பணிக்குத் தயாராகும்படியும் தலிபானுக்கு அல்-கொய்தா அறிவுறுத்தியுள்ளது.

## உலக செய்திகள்

# வெள்ளத்தில் மிதக்கும் அசாம்



## 22 மாவட்டங்கள் பாதிப்பு; 6.48 இலட்சம்பேர் பரிதவிப்பு

இந்தியாவின் தொடரும் கடும் மழையால் டில்லி அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் கடும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளன.

அசாமில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் அம்மாநிலம் இடையே பாயும் நதியான பிரம்மபுத்திராவிலும் அதன் துணை நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அசாமில் வெள்ளத்தால் 22 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 500 கிராமங்கள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன. மொத்தம் 6.48 இலட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அசாம் மட்டுமல்லாமல் மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களிலும் கனமழை நீடித்து வருகிறது.

# முடங்கியது இன்ஸ்டாகிராம்



உலகளவில் இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளம் முடங்கியதால் அதில் படங்களைப் பதிவேற்றவும் பகிரவும் முடியாமல் பயனாளர்கள் தவிப்புக்குள்ளாயினர்.

படங்கள், வீடியோ காட்சிகளைப் பகிர்வதற்குப் பயன்படும் சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராம் இந்திய நேரப்படி பகல் 12 மணியளவில் முடங்கியது. அதில் படங்கள், வீடியோக்களைப் பதிவேற்றிப் பகிர முடியாததால் பயனாளர்கள் இன்னலுற்றனர்.

பயனாளர்களின் விவரங்களைப் பார்க்கவும் முடியவில்லை. இதற்கான காரணம் என்ன என்பது குறித்து பேஸ்புக் நிறுவனம் எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை.

# அமெரிக்காவை புரட்டி எடுக்கும் ‘இடா’ சூறாவளி: நியூயோர்க், நியூஜெர்ஸியில் அவசர நிலை பிரகடனம்

**2வயது குழந்தை உட்பட 9பேர் பலி; விமான சேவைகள் இரத்து**



அமெரிக்கா வட கிழக்கு மாகாணங்களை புரட்டி எடுத்துவரும் ‘இடா புயல்’ காரணமாக கனமழை பெய்துவருகிறது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் நியூஜெர்ஸி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 2 வயது குழந்தை உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

மேலும் குறித்த பகுதிகளில் மின் துண்டிக்கப்பட்டுள்ளதனால் சுமார் 2இலட்சத்து 80ஆயிரம் பேர் பரிதவிப்புக்குள்ளாகியுள்ளனர்.


கன மழையால் நியூயோர்க் நகரவீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் வாகனங்கள் பல வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

வரலாறு காணாத கன மழை மற்றும் வெள்ளத்தால் நியூயோர்க் மேயர் Bill de Blasio, அவசர நிலையை அறிவித்துள்ள நிலையில், மக்கள் அனைவரும் வீட்டிலேயே இருக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நியூ ஜெர்ஸியில் ஆங்காங்கே சுழல் காற்று வீசியதால் பல வீடுகள் சேதமடைந்தன. கன மழையால் நியூஜெர்ஸி ஆளுநர் Phil Murphy-யும் அவசர நிலையை அறிவித்துள்ளார்.

நெவார்க், லாகார்டியா மற்றும் ஜே.எஃப்.கே ஆகிய பகுதிகள் அருகே அமைந்துள்ள விமான நிலையங்களில் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. மன்ஹாட்டன், தி பிராங்க்ஸ் மற்றும் குயின்ஸ் ஆகிய நகரங்களின் முக்கிய வீதிகள் மூடப்பட்டுள்ளன.

# காந்தி படுகொலை குறித்து புதிய புத்தகம் வெளியீடு



மகாத்மா காந்தி படுகொலை தொடர்பாக, இதுவரை வெளிவராத உளவுத்துறை தகவல்கள், பொலிஸ் ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட புதிய புத்தகம், எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி வெளியாகவுள்ளது.

மகாத்மா காந்தி படுகொலை சம்பவம் குறித்து பல்வேறு புத்தகங்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், தி மர்டரர், தி மொனார்ச் அண்ட் தி பக்கிர் என்ற தலைப்பில், புதிய புத்தகத்தை, ஹார்பர் காலின்ஸ் இந்தியா பதிப்பகம், அடுத்த மாதம், முதலாம் திகதி வெளியிடுகிறது. புலனாய்வு பத்திரிகையாளர் அப்பு எஸ்தோஸ் சுரேஷ் மற்றும் பிரியங்கா கோட்டம்ராஜு ஆகியோர் இணைந்து இந்த புத்தகத்தை எழுதியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது:

காந்தி படுகொலைக்கான சூழல் எப்படி உருவானது என்பதை இந்த புத்தகம் மறு உருவாக்கம் செய்கிறது. அவர் சுடப்பட்டது வரையிலான சம்பவங்கள், அதன் பிறகான விசாரணை ஆகியவை குறித்து, வேறு கோணத்தில் இந்த புத்தகம் பேசுகிறது. இதுவரை வெளிவராத உளவுத்துறை தகவல்கள், பொலிஸ் விசாரணை ஆவணங்களின் அடிப்படையில் புலனாய்வு செய்து இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. - இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தலைமை பயிற்றுவிப்பாளரான அவிஷ்க



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான அவிஷ்க குணவர்தன, இலங்கை கிரிக்கெட் அணியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறவிருந்த பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச தொடரில், ஆப்கானிஸ்தான் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் அவிஷ்க குணவர்தன ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை இளையோர் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். 44 வயதாகும் அவிஷ்க குணவர்தன இலங்கை கிரிக்கெட்டில் முன்னதாக துடுப்பாட்ட பயிற்றுவிப் பாளராகவும், இலங்கை ஏ அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டிருந்த நிலையில் தற்போது இளையோர் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் இலங்கை அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளிலும், 61 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ளார். அவிஷ்க குணவர்தன கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியிருந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவையானது கடந்த மே மாதம் தான், அவர் மீதான தடை அனைத்தையும் நீக்கி கிரிக்கெட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் ப்ரோ கபடி லீக்கில் இலங்கையின் அன்வர் சஹீட்




பிரபல கபடி லீக் தொடரான இந்தியாவின் ப்ரோ கபடி ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடும் அடிப்படையில் வீரர்கள் ஏலத்தில் முதல் முறையாக இலங்கையைச் சேர்ந்த வீரர் ஒருவர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை கடற்படையைச் சேர்ந்த 25 வயதான அன்வர் சஹீட் பாபா என்ற வீரர் இவ்வாறு ப்ரோ கபடி ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடவுள்ளார்.

12 அணிகள் பங்குபற்றும் 8ஆவது ப்ரோ கபடி ப்ரீமியர் லீக் தொடரானது எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் தலைவாஸ் அணியால் அன்வர் சஹீட் பாபா ஏலத்தில் வாங்கப்பட்டார். ஏலத்தில் இலங்கையைச் சேர்ந்த அன்வர் சஹீட், லஹிரு குருப்பு, ஆசிரி சந்தருவன் மற்றும் அஸ்லம் சஜா ஆகிய வீரர்கள் இடம்பெற்றனர்.




இந்த நிலையில், வீரர்களுக்கான முதல்கட்ட ஏலத்தில் இலங்கை வீரர் அன்வர் சஹீட் பாபாவை தமிழ் தலைவாஸ் அணி இந்திய ரூபா 10 இலட்சம் பெறுமதியில் ஏலத்தில் எடுத்தது. இந்தியன் ப்ரோ கபடி ப்ரீமியர் லீக் வரலாற்றில் வீரர்களுக்கான ஏலத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை இலங்கை சார்பாக இம்முறை ஏலத்தில் இடம்பெற்ற ஏனைய மூன்று வீரர்களும் இரண்டாம் கட்ட ஏலத்தில் மீண்டும் இடம்பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் இந்திய அணி 7ஆம் திகதி அறிவிப்பு?

ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கான இந்திய அணி எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

7ஆவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரானது அடுத்த மாதம் 17ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய இரு நாடுகளில் ஆரம்பமாகிறது. குறித்த உலகக்கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் ஒவ்வொரு அணிகளும் தங்களது வீரர்களை அறிவிக்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை காலக்கேடு விதித்துள்ளது.

இந்நிலையில் ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கான இந்திய அணி 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி த ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமான நிலையில், இந்த போட்டி முடிவடைந்தவுடன் தேர்வு குழுவினர் கூடி உலகக்கிண்ண தொடருக்கான அணியை தேர்வு செய்யவுள்ளனர்.



# உலக சாதனை படைத்த ரொனால்டோ

உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ சர்வதேச போட்டிகளில் அதிக கோல்களை அடித்த வீரராக உலக சாதனை படைத்துள்ளார். நேற்று முன்தினம் போர்த்துக்கலில் நடைபெற்ற போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான சர்வதேச உதைபந்து போட்டியின்போதே ரொனால்டோ இந்த உலக சாதனையை படைத்தார்.

குறித்த போட்டியில் போர்த்துக்கல் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 2 கோல்களை அடித்தார். இதன் மூலம் ஆடவர் சர்வதேச உதைபந்து வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரராக காணப்பட்ட ஈரான் நாட்டை சேர்ந்த அலி டாய்யின் சாதனையை முறியடித்தார். குறித்த போட்டியில் பெறப்பட்ட இரு கோல்களுடன் 111 கோல்களை ரொனால்டோ பெற்றுள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக சர்வதேச போட்டிகளில் அதிக கோல்களை அடித்த வீரர்கள் பட்டியலில் ஈரானின் அலி டாய் (109), மலேசியாவின் மொக்தர் தஹாரி (89), ஹங்கேரியின் ஃபெரென் புஸ்காஸ் (84) ஆகியோர் காணப்படுகின்றனர்.




விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# பதக்கம் வென்ற வீரர்களுக்கு கோடிகள்

டோக்கியோ பராலிம்பிக்கில் ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில் பதக்கங்களை பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்த இரு வீரர்களுக்கும் பணப்பரிசுகளை வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் படி, எ.ஃப் 46 பிரிவில் களமிறங்கி இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்த தினேஷ் பிரியன்தவுக்கு ரூ. 5 கோடி பரிசுத்தொகையும், ஆடவர் ஈட்டி எறிதல் எ.ஃப் 64 பிரிவில் களமிறங்கி வெண்கலப் பதக்கம் வென்ற சமித்த துலானுக்கு ரூ. 2 கோடி பரிசுத்தொகையும் வழங்குவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.




# இலங்கையில் மகளிர் T 20 லீக் தொடர்




கிரிக்கெட் உலகில் ஒவ்வொரு நாடுகளிலும் ஏராளமான இருபதுக்கு 20 லீக் போட்டிகள் நடைபெற்றுவரும் நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையானது மகளிருக்கான இருபதுக்கு 20 லீக் தொடர் ஒன்றினை நடத்த திட்டமிட்டுள்ளது.

லங்கா வுமென்ஸ் லீக் ரி 20 என்ற பெயரில் வெளிநாட்டு மகளிர் கிரிக்கெட் வீரர்களின் பங்கேற்புடன் குறித்த தொடரானது ஒக்டோபர் மாதம் தம்புள்ளை அல்லது பல்லேகலையில் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை எதிர்பார்த்துள்ளது. ஒரு அணியின் குழாமில் அதிகபட்சமாக 6 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற முடியும்.

குறித்த தொடரில் நான்கு அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இலங்கை கிரிக்கெட் சபையானது குறித்த லீக் தொடரை நடத்துவதற்கு தற்சமயம் விளையாட்டு சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது. விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி எதிர்வரும் செப்டெம்பர் 7ஆம் திகதி பிற்பகல் 01.00 மணியுடன் நிறைவடையும் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# ஆப்கான் கிரிக்கெட்டுக்கு தலிபான்கள் பச்சைக்கொடி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாடும் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஹமீத் ஷின்வாரி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதால் அதன் கிரிக்கெட் எதிர்காலம் பற்றிய அச்சம் ஏற்பட்டது. கிரிக்கெட் விளையாட்டுக்கு தலிபான்கள் ஒப்புதலளித்ததால் அச்சம் நீங்கியுள்ளது.

நவம்பர் 27 முதல் டிசம்பர் 1 வரை ஹோபார்ட்டில் நடக்கவிருந்த டெஸ்ட் போட்டி கடந்த ஆண்டு திட்டமிடப்பட்டது. ஆனால் கொரோனா தொற்றுநோய் மற்றும் சர்வதேச பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் ஆப்கானிஸ்தானின் முதல் டெஸ்ட் இதுவாகும்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்திற்கு முன், ஆப்கானிஸ்தான் அணி ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 15வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரில் பங்கேற்கும். இந்த மாத இறுதியில் ஆப்கானிஸ்தானின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கு செல்லும் என்றும் ஷின்வாரி உறுதிபடுத்தினார்.

கடந்த மாதம் தலிபான்கள் காபூலுக்குள் நுழைந்த பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேற்றப்பட்டதில் இருந்து கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டுகள் பாதிக்கப்படும் என்ற அச்சம் நிலவியது. ஆனால் ஆப்கான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் கிரிக்கெட்டை தலிபான்கள் ஆதரிப்பதாக திட்டவட்டமாக கூறினர்.

2000களின் முற்பகுதி வரை ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் அறியப்படவில்லை. பாகிஸ்தானில் இந்த விளையாட்டை ஆப்கானிஸ்தான் அகதிகள் தங்கள் சொந்த நாட்டில் அறிமுகப்படுத்தினர். சர்வதேச கிரிக்கெட் பேரவையால் ஆப்கானிஸ்தானின் நட்சத்திர வீரர் ரஷித் கான் கடந்த ஆண்டின் சிறந்த இருபதுக்கு 20 வீரராக தேர்வு செய்யப்பட்டார்.





# களஞ்சியங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 29,900 மெட்ரிக் தொன் சீனித் தொகை அரசுடைமையாக்கப்பட்டது













## நிறுவனங்களினூடாக நுகர்வோருக்கு விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை

வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 29 ஆயிரத்து 900 மெட்ரிக் தொன் சீனி தொகை நேற்று முன்தினம் (01) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவை அரசுடைமையாக்கப்பட்டதாக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல தெரிவித்திருந்தார்.

இந்தச் சீனித் தொகை, கட்டுப்பாட்டு விலையில், அரச மற்றும் தனியார் வர்த்தக நிலையங்களின் ஊடாக நுகர்வோர் பொதுமக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஒரு கிலோகிராம் சீனிக்காக அறவிடப்பட்ட 50 ரூபா என்ற இறக்குமதித் தீர்வை வரியானது, நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி முதல், 25 சதமாகக் குறைக்கப்பட்டது. அன்றைய நாளில், நாட்டில் 88 ஆயிரத்து 878 மெட்ரிக் தொன் சீனி இருப்பில் இருந்தது.

2020 ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் 2021 ஜூன் 30ஆம் திகதி வரை, 5 இலட்சத்து 84 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. உள்நாட்டின் மாதாந்த சீனித் தேவையின் அளவு 35 ஆயிரம் மெட்ரிக் தொன்னாகும்.

இருப்பினும், வருடாந்த சீனித் தேவைக்கு மேலதிகமாக சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று, நுகர்வோர் விவகார அதிகார சபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டுக்குள் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதான மாயையை உருவாக்கி, நுகர்வோரைச் சிரமத்துக்கு உட்படுத்தி, அதிக விலைக்கு சீனியை விநியோகிக்கும் முயற்சியொன்று, கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டமையைக் காணக்கிடைத்தது.



பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் iiஆவது பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள், 2021-08-30ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமித்து, சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்கான அதிகாரங்களை அவருக்கு வழங்கவும், ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நிலையில், பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சீனியைக் கண்டுபிடிப்பதற்காக முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கண்டறியப்படும் சீனித் தொகையை, கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்ததாக ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



(2021-09-01 அன்று அரசுடைமையாக்கப்பட்ட சீனித் தொகை தொடர்பான விவரங்கள் பின்வருமாறு)

| வர்த்தக நிலையம் | முகவரி | அளவு (மெட்ரிக் தொன்) |
|---|---|---|
| Pyramid Wilmar Company | முத்துராஜவெல | 6,200 |
| Global Trading Company | 809/5, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை | 4,800 |
| Global Trading Company | 42, உஸ்வெட்டகெய்யாவ, வத்தளை | 24,100 |
| Wilson Trading Company | (களஞ்சியசாலைத் தொகுதி 04) | 14,000 |
| R.G. Stores | ஹுணுப்பிட்டிய வீதி, கிரிபத்கொட | 800 |
| மொத்தம் | | 29,900 |







# கிண்ணியாவில் கத்தரிச் செடிகளுக்கு நோய்த் தாக்கம்



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாவில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்பட்ட கத்தரிச் செய்கைக்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேசத்தில் அதிகளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

கிண்ணியா பிரதேசத்தில் காக்காமுனை, சம்மாவச்சதீவு, பூவரசன்தீவு, சூரங்கல், ஆயிலியடி, மணியரசன்குளம் மற்றும் மஜீத் நகர் போன்ற பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிண்ணியா மக்களின் வாழ்வாதார தொழிலாக ஆரம்பகாலத்திலிருந்து இன்று வரைக்கும் விவசாயத்தையே மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக விவசாயச் செய்கையில் சேதனப் பசளை மூலம் இரண்டு போகங்களில் மாரி, கோடை காலங்களில் விவசாயத்தை மேற்கொள்கின்றனர். சேதனப் பசளையாக மாட்டுச் சாணம், ஆட்டெரு, உமி, சாம்பல் மற்றும் தாவரங்களின் இலை குலை போன்ற பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது கிண்ணியா பிரதேசத்துக்குட்பட்ட சம்மாவச்சதீவு பிரதேசத்தில் மாரி காலப் பயிர்ச் செய்கையினை முன்னெடுத்து வருகின்றனர். இங்கு கத்தரி, வெண்டி, கொச்சி(மிளகாய்), பஸ்ட்றா, மரவள்ளி, முருங்கை மற்றும் இராசவள்ளி போன்றவற்றை பயிரிடுகின்றனர்.

இந்நிலையில், கத்தரி செடிகளுக்கு ஏற்பட்டுள்ள நோயினை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு மருந்துகளை பயன்படுத்திய போதிலும் கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கின்றனர். நோய்த் தாக்கம் தொடர்பாக விவசாய போதனாசிரியருக்கு தெரியப்படுத்தி அதனை வந்து பார்த்தும் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ள கத்தரி மரத்தின் மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்பியும் நோய்க்கான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# 109 வயதான செல்லம்மா ஆச்சி காலமானார்

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் வசித்து வந்த செம்பக்குட்டி செல்லம்மா (வயது 109) ஆச்சி நேற்று (02.09.2021) இயற்கை எய்தினார்.

1912 ஆம் ஆண்டு பிறந்த செல்லம்மா ஆச்சி தனது 109 வயது வரை ஆரோக்கியமாகவே வாழ்ந்து வந்துள்ளார். இப்பிரதேசத்தில் அதிகூடிய வயதுடன் வாழ்ந்து வந்த செல்லம்மா ஆச்சிக்கு 12பிள்ளைகள், 62 பேரப்பிள்ளைகள், 147 பூட்டப்பிள்ளைகள், 27 கொள்ளுப் பிள்ளைகள் உள்ளனர்.

இறக்கும் வரை தமது அன்றாடக் கடமைகளை தாமே செய்து வந்துள்ளார். மூன்று நேரமும் தவறாது சாமிகும்பிடுவது, தேவார, திருவாசகங்களை ஓதுவது என தமது பொழுதை போக்கியுள்ளார்.

